சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி

**முன்னிலை: திரு.P.S. ரஸ்கின் ராஜ், B.A., L.L.B.,**

சார்பு நீதிபதி, உசிலம்பட்டி

2024ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20-ம் நாள் செவ்வாய்க்கிழமை

*அசல்வழக்கு எண். 38/2023*

**(CNR No. TNMD240000432023)**

கனரா வங்கி,
உசிலம்பட்டி கிளை,
அதன் மேலாளர் மூலமாக ..... வாதி

/ எதிர் /

1. M.பிரியா
2. G.முருகன் ..... பிரதிவாதிகள்

இந்த வழக்கு இந்நீதிமன்றம் முன்பு 02.02.2024 அன்று இறுதியாக விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. M.ஹரிகிருஷ்ணன் அவர்களும், பிரதிவாதிகள் தரப்பில் ஆஜராகாததால் அவர்கள் தோன்றாத் தரப்பினராகக் கருதப்பட்டு வழக்கு ஆவணங்கள் மற்றும் சாட்சியம், வாதங்கள் பரிசீலிக்கப்பட்டு இதுவரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும் ஒருதலைபட்ச…

**தீர்ப்புரை**

இவ்வழக்கானது பிராது தொகையான ரூ.4,07,074/-ஐ வாதிக்கு, பிரதிவாதிகள் செலுத்தக் கோரியும் மற்றும் வழக்கு தாக்கல் செய்த தேதியிலிருந்து வழக்கு முடியும் தேதி வரை 10.45% வட்டியுடன்

செலுத்தக் கோரியும், செலவுத் தொகைக்கும் தாக்கல் செய்யப்பட்ட வழக்காகும்.

1**. வாதி தரப்பு வழக்குரையின் சுருக்கம் பின்வருமாறு :**

1ம் பிரதிவாதி கல்லூரியில் படிப்பதற்காக கல்வி கடன் கோரி தனது தந்தையாகிய 2ம் பிரதிவாதியுடன் சேர்ந்து வாதி வங்கியை அணுகி ரூ.2,05,000/-ஐ கடனாக கோரி விண்ணப்பித்தார். அக்கடனை ஆண்டுக்கு 10.95% மாதம் ஒரு முறை கூடும் கூட்டு வட்டியுடன் சேர்த்து 60 மாத தவணைகளில் செலுத்தி வரவும் பிரதிவாதிகள் ஒப்புக்கொண்டார்கள். 1ம் பிரதிவாதியின் கல்லூரி கல்வி முடிந்த 12 மாதத்திற்கு பின்போ அல்லது வேலை கிடைத்த 6 மாதத்திற்குள் இந்த இரண்டில் எது முன்போ அது முதல் மாதம் தோறும் செலுத்தி வரவும் 1ம் பிரதிவாதி ஒப்புக்கொண்டார். 1ம் பிரதிவாதி பெறுகின்ற அக்கடனுக்கு 2ம் பிரதிவாதி கூட்டுக்கடனாளியாக இருக்கவும் ஒப்புக்கொண்டார். அக்கடனுக்கு ஆதரவாக 1 மற்றும் 2ம் பிரதிவாதிகள் சேர்ந்து 12.11.2013 அன்று வாதி வங்கிக்கு கல்வி கடன் ஒப்பந்தம் ஒன்றை எழுதிக்கொடுத்தனர். பிரதிவாதிகள் பெற்ற கடன் தொகையை முறையாக செலுத்தவில்லை. இதுவரை பிரதிவாதிகள் வாதிக்கு வட்டி தொகையோ, அசல் தொகையோ செலுத்தவில்லை என்பதால் வாதி அசல் தொகையையும், அதற்குண்டான வட்டியையும் வசூல் செய்ய இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார்.

2. பிரதிவாதிகள் நீதிமன்ற அழைப்பாணையை பெற்று கொண்டு இவ்வழக்கில் முன்னிலையாகாததால் அவர்கள் தோன்றாத் தரப்பினர்களாக உத்தரவு செய்யப்பட்டுள்ளார்கள். வாதி தரப்பில் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு வ.சா.ஆ.1 முதல் வ.சா.ஆ.6 சான்றவாணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

3. வாதி கேட்கும் பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா? என்பதை பரிசீலிக்கும் போது வாதி தன்னுடைய வழக்கினை மெய்ப்பிப்பதற்காக 09.11.2013ம் தேதியிட்ட பிரதிவாதிகள், வாதி வங்கிக்கு எழுதிக்கொடுத்த கல்விக்கடன் விண்ணப்பம் வா.சா.ஆ.1 ஆகவும், 12.11.2013ம் தேதிய பிரதிவாதிகள், வாதி வங்கிக்கு எழுதிக்கொடுத்த கல்விக்கடன் ஒப்பந்தம் வா.சா.ஆ.2 ஆகவும், 06.01.2016ம் தேதியிட்ட பிரதிவாதிகள் எழுதிக்கொடுத்த கடன் உயிர்பிப்புக் கடிதம் வ.சா.ஆ.3 ஆகவும், 04.09.2018ம் தேதியிட்ட பிரதிவாதிகள் எழுதிக்கொடுத்த கடன் உயிர்பிப்புக் கடிதம் வ.சா.ஆ.4 ஆகவும், 23.07.2021ம் தேதிய 2ம் பிரதிவாதி, தனக்காகவும், 1ம் பிரதிவாதிக்காகவும் எழுதிக் கொடுத்த உயிர்ப்பிப்புக் கடிதம் வா.சா.ஆ.5 ஆகவும், 11.12.2022ம் தேதியிட்ட வங்கி கணக்குப் பட்டியல் வா.சா.ஆ.6 ஆகவும் தாக்கல் செய்துள்ளார். பிரதிவாதிகள் இந்த வழக்கில் நீதிமன்ற அறிவிப்பை தெரிந்துகொண்டு நீதிமன்ற வழக்கு விபரம் தெரிந்தும் நீதிமன்றத்தில் ஆஜராகாமல் இருந்துவிட்டார். எனவே அவர்கள் தோன்றாத்தரப்பினராக உத்தரவு செய்யப்பட்டுள்ளார்கள். 1ம் பிரதிவாதி

தோன்றா தரப்பினராக இருந்ததால் வாதியின் வழக்கு விபரங்களைப் 1ம் பிரதிவாதி ஒப்புக்கொண்டுள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே பிரதிவாதிகளுக்கு எதிரான இந்த வழக்கு வாதி தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது. வாதியிடம் வாங்கிய கடனை பிரதிவாதிகள் திருப்பி செலுத்தக் கடமைப்பட்டவர்கள். எனவே வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்று இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக, வாதியின் வழக்கு செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்பட்டு வாதிக்கு பிரதிவாதிகள் தனித்தனியாகவோ அல்லது கூட்டாகவோ பிராது தொகை ரூ.4,07,074/-ஐ செலுத்த வேண்டும். மேற்படி அசல் தொகை ரூ.2,05,000/-க்கு வழக்கு தாக்கல் செய்த தேதி முதல் தொகை செலுத்தி முடிக்கும் தேதி வரை 10.45% ஆண்டு வட்டியுடன் செலுத்த வேண்டுமென்று தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் மேற்கொண்டு இன்று 2024-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 20-ம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2024.02.20 14:57:43 +0530

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.

**வாதி தரப்பு சாட்சி :**

வா.சா.1 ஆல்பின்ராஜ்

**வாதி தரப்பு சான்றாவணங்கள் :**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1. | 09.11.2013 | பிரதிவாதிகள், வாதி வங்கிக்கு எழுதிக்கொடுத்த கல்விக்கடன் விண்ணப்பம் |
| வா.சா.ஆ.2 | 12.11.2013 | பிரதிவாதிகள், வாதி வங்கிக்கு எழுதிக்கொடுத்த கல்விக்கடன் ஒப்பந்தம் |
| வா.சா.ஆ.3 | 06.01.2016 | பிரதிவாதிகள் எழுதிக்கொடுத்த கடன் உயிர்பிப்புக் கடிதம் |
| வா.சா.ஆ.4 | 04.09.2018 | பிரதிவாதிகள் எழுதிக்கொடுத்த கடன் உயிர்பிப்புக் கடிதம் |
| வா.சா.ஆ.5 | 23.07.2021 | 2ம் பிரதிவாதி, தனக்காகவும், 1ம் பிரதிவாதிக்காகவும் எழுதிக் கொடுத்த உயிர்ப்பிப்புக் கடிதம் |
| வா.சா.ஆ.6 | 11.12.2022 | வங்கி கணக்குப் பட்டியல் |

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2024.02.20 14:57:50 +0530

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.